**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**
**O.S.38/2024**
**Examination of - DW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | வி.சாது சுந்தர் சிங் |
| Father Name | : | வேலாயுதம் |
| Age | : | 27 |
| Place | : | அண்டம்பள்ளம் கிராமம், கீழ்பென்னாத்தூர் |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 21.08.2025.**

**முதல் விசாரணை**

நான் தற்போதுஅண்டம்பள்ளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். வழக்கின் வாதி சரவணன் எனபவர் எனக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் அனுபவத்தை மீட்டெடுத்தல் பரிகாரம் கோரி என் மீதும் எனது தம்பிகள் மீதும் மற்றும் எனது தகப்பனாருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வாதியின் வழக்கை பொய்பிப்பு செய்வதற்காக எனது தரப்பு ஆவணங்களாக எங்களுடைய பாட்டியான எம்.பட்டம்மாள் பெயரில் கடந்த 26.02.1992ம் தேதியன்று தமிழக அரசு தாவா சொத்திற்கு பட்டா வழங்கியது அந்த பட்டா அசல் **பி.சா.ஆ1** ஆகும். 20.07.2012ம் தேதி எனது பாட்டி பட்டம்மாள் எங்களுக்கு எழுதி வைத்த தான பத்திர சான்றிட்ட நகல் **பி.சா.ஆ2** ஆகும். மேற்படி பிரதிவாதிகள் ஆன 1 முதல் 3 ஆகிய எங்களது பெயருக்கு தமிழக அரசு வழங்கிய பட்டா **பி.சா.ஆ.3** ஆகும். மேற்படி தாவா சொத்தான தகர ஷீட் கொண்ட வீட்டிற்கு மின் இணைப்பு பெற்றோம் அந்த மின் இணைப்பு அட்டை எண் 02-303-009-1098 அதற்குண்டா மின் கட்டண அட்டை **பி.சா.ஆ.4** ஆகும். மற்றும் மேற்படி தகர ஷீட் கொண்ட வீட்டிற்கு ஊராட்சிக்கு செலுத்திய வரி ரசீது **பி.சா.ஆ.5** ஆகும். வாதியின் தாவா தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணை செய்ய வாதி தரப்பு வழக்கறிஞர் அவகாசம் கோரி அவகாசம் அளித்து வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்